DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ஈஸ்வரன் | Father/Husband Name : பால்ராஜ் |
| Age : 32 | Village : கீழச் சத்திரம் |
| Taluk : | Calling : JCB ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24 Feb 2026 13:19

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் கீழச் சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் JCB ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன்.

2. ஆஜர் எதிரிகள் எனது அண்ணன் முறை ஆவார்கள். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னர் மாலை 04.00 மணிக்கு ஆறுமுகம் வீட்டு முன்பாக வைத்து அடையாளம் தெரியாத நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். அப்போது ஏற்பட்ட தள்ளு முள்ளில் எனக்கு காயம் ஏற்பட்டது. என்னை தாக்கிய நபர் யாரென்று எனக்கு தெரியாது. நடந்த சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். போலீசார் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதிய விவரம் பற்றி எனக்கு தெரியாது. **(புகார் மனுவியல் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

3. நான் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டேன். சமாதானமாக செல்ல எதிரிகள் என்னை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை. எதிரிகள் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன். **(சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை** –

4. கடந்த 01.08.2020ம் தேதி மாலை 04.00 மணிக்கு ஆறுமுகம் வீட்டு முன்பாக வைத்து ஆஜர் எதிரிகள் என்னை தகாத வார்த்தைகளால் பேசி, தாக்கி, கொலைமிரட்டல் விடுத்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் தற்போது எதிரிகளுடன் சமாதானமகிவிட்டு அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

24 Feb 2026 13:24

Judicial Magistrate 2, Sattur